**செய்தி வெளியீடு: 339** **நாள். 11.07.2016**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, தென்மேற்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் உயர் அலுவலர்களுடன் ஆலோசனை!**

**தொற்று நோய் தடுப்பு குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திட அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட அமைச்சர் வேண்டுகோள்!**

----****----

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க, தென்மேற்கு பருவமழை தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை கூட்டம், சென்னை ஓமந்தூரார் அரசு பன்னோக்கு மருத்துவமனை வளாக கூட்டரங்கில் இன்று 11.07.2016 மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் தலைமையில் மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்களுடன் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கொசுவினால் பரவும் வைரஸ் காய்ச்சல் மற்றும் தொற்றுநோய் தடுப்பு குறித்து பொதுமக்களிடத்தில் மாபெரும் விழிப்புணர்வை ஏற்படுத்திடவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

i. பொது இடங்களில் கொசுக்கள் உற்பத்தியாவதை தடுக்க வீடுகளில் நீர் தேங்காவண்ணம் பார்த்துக் கொள்வது, தண்ணீர் சேமிக்கும் பாத்திரங்களில் கொசுக்கள் நுழையாவண்ணம் மூடி வைத்தல், குடிநீரைக் காய்ச்சி பருகுதல்.

ii. நோய் கண்காணிப்பு பணிகளை தீவிரப்படுத்தவும், புகை மருந்து அடிக்கவும், கொசு உற்பத்தியாகும் இடங்களைக் கண்டறிந்து அழிக்கவும், பொதுமக்களுக்கு தீவிர விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் போர்க்கால அடிப்படையில் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

iii. பொது சுகாதாரத் துறை சார்ந்த களப்பணியாளர்களுக்கு தொடர்ச்சியாக நோய் கண்காணிப்பு மற்றும் தடுப்பு முறைகள் பற்றி பயிற்சி அளித்து, கொசு உற்பத்தியைத் தடுக்கத் தேவையான உபகரணங்கள் வழங்குதல்.

iv. ஒவ்வொரு மாவட்டத்திலும் வட்டார அளவிலான விரைவு செயல்பாட்டுக் குழுக்கள் (Rapid Response Team) காய்ச்சல் ஏற்பட்டுள்ள பகுதிக்கு சென்று, காய்ச்சலின் காரணத்தை உடனுக்குடன் கண்டறிந்து போர்க்கால அடிப்படையில் நோய் தடுப்பு பணிகளை மேற்கொண்டு **காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிய சிறப்பு முகாம்கள் நடத்துதல்.**

v. “எலிசா” முறையில் டெங்கு காய்ச்சலை கண்டுபிடிக்கும் சோதனை மையங்களின் எண்ணிக்கை 60–லிருந்து தற்பொழுது 75–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. டெங்கு காய்ச்சலுக்கு சிகிச்சை அளிக்க தேவையான மருந்து மாத்திரைகள், இரத்த அணுக்கள், பரிசோதனைக் கருவி, மருந்துகள், இரத்தக் கூறுகள் மற்றும் இரத்தம் ஆகியவற்றை போதிய அளவில் இருப்பில் வைத்தல்.

vi. பொது சுகாதாரத் துறை இயக்குநரகத்தில், செய்தித் தாள்களில் வரும் செய்திகள் மற்றும் தொலைக்காட்சி செய்திகளை, 24 மணி நேரமும் கண்காணிக்க ஏற்கனவே இயங்கி வரும் கட்டுபாட்டு அறையை மேலும் வலுப்படுத்துதல்.

vii. காய்ச்சல் தொடர்பான தகவல்களை அளிக்கவும், பெறவும் சென்னை பொது சுகாதாரத் துறை இயக்குநரகத்தில் 24 மணி நேரம் தொடர்புகொள்ள தொலைபேசி எண்கள் – 044–24350496, 044–24334811 மற்றும் கைபேசி எண் 94443 40496.

viii. **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி, இந்திய மருத்துவ முறை பாரம்பரிய மருந்துகளான **நிலவேம்பு குடிநீர், பப்பாளி இலைச்சாறு மற்றும் மலைவேம்பு இலைச்சாறு** போன்றவை அரசு மருத்துவமனைகளில் வழங்கப்பட்டு இயற்கையாக காய்ச்சல் குணமடைய ஊக்குவித்தல்.

டெங்கு போன்ற வைரஸ் காய்ச்சலை தடுக்க பொதுமக்களிடையேயான விழிப்புணர்வும் மற்ற துறைகளுடனான ஒருங்கிணைப்பின் அவசியத்தை அமைச்சர் வலியுறுத்தினார். டெங்கு காய்ச்சலை பரப்பும் ஏடிஎஸ் கொசு உற்பத்தியை முற்றிலுமாக தடுத்து **காய்ச்சல் மூலம் இறப்பு என்ற நிலையே ஏற்படக்கூடாது என்ற அளவிற்கு மேலும் அர்ப்பணிப்பு உணர்வுடன் மருத்துவர்கள், துறை அலுவலர்கள் மற்ற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படவும்,** பொதுமக்கள் தொற்று நோய் தடுப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி தொற்று நோய் பரவாமல் தடுத்திட அரசுக்கு முழு ஒத்துழைப்பு நல்கிடவும் மாண்புமிகு அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

காய்ச்சல் கண்டவுடன் பொதுமக்கள் **தாங்களாகவே மருந்து கடையில் மருந்துகளை வாங்கி உட்கொள்வதையும், அங்கீகாரம் பெறாத போலி மருத்துவர்களிடம் சிகிச்சை பெறுவதையும் முற்றிலுமாக தவிர்க்கவும்** அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளுக்குச் சென்று முறையான சிகிச்சை பெறவும் அமைச்சர் அறுவுறித்தினார்.

இந்நிகழ்ச்சியில் மக்கள் நல்வாழ்வுத் துறை செயலர் திரு. ஜெ. ராதாகிருஷ்ணன்,இ.ஆ.ப., இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை ஆணையர் திரு. மோகன் பியாரே, இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வுத் துறை சிறப்புச் செயலர் முனைவர் ப்பி. செந்தில்குமார், இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் டி. கார்த்திகேயன் இ.ஆ.ப., கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் திரு ட்டி. ஆப்ரகாம், இ.ஆ.ப., மாநில நலவாழ்வு திட்ட குழும இயக்குநர் மரு. தாரேஸ் அகமது, இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (சுகாதாரம்) திரு. ஆர். கண்ணன், இ.ஆ.ப., மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர். ஆர். விமலா, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துகள் துறை இயக்குநர் டாக்டர் கே. குழந்தைசாமி, மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள் துறை இயக்குநர் டாக்டர் கே. செங்குட்டுவன் மருந்து கட்டுப்பாடு இயக்குநர் திரு. எஸ். அப்துல் காதர், பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் திரு. எஸ். கண்ணப்பன், பொது சுகாதாரத் துறை கூடுதல் இயக்குநர் டாக்டர் வடிவேலன் மற்றும் உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**